# சிவவாக்கியரின் மெய்ஞானம் என்னும் மெய்ப்பொருள்

7

**முனைவர் த.தமிழரசி**
**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை**
**அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர் கல்வி நிறுவனம்**
**கோயம்புத்தூர் – 641043**
bharathi.thamil@gmail.com
ORCID ID: https://orcid.org./0000-0003-0759-625x

**ஆய்வுச்சுருக்கம்**

சித்தர்கள் என்பவர்கள் தங்களது ஆன்ம பயணமாகிய துறவோட்டத்தின் வழி இறைநிலையை அடையமுடியும் என்ற தத்துவத்தை உலகிற்கு உணர்த்தியவர்கள். தத்துவம், யோகா மற்றும் மருத்துவத்தின் மீது நம்பிக்கை வைத்துச் செயலாற்றியவர்கள். சித்தர்கள் என்றால் சித்தி எனும் ஆற்றலைத் தன்னகத்தே உடையவர்கள் என்று பொருள் கொள்ளலாம். அவ்வாறான சித்தர்களின் வரிசையில் சிவ வாக்கியர் மனதையும் உடலையும் கோயிலாகக் கொண்டு அதில் தான் இறைவன் உறைகின்றான் என்னும் உயரியக் கருத்தைக் கூறி மனிதனின் நோக்கமானது பாசவிலக்கம், அக மெய்ஞானம் , தியானம் ஆகியவற்றை நோக்கி அமைந்தால் பரம்பொருளை அடையலாம் என்ற தத்துவத்தை முன்னிறுத்துகின்றார். சிவவாக்கியரின் பாடல்களில் அமைந்துள்ள மெய்ஞானம் என்கின்ற மெய்ப்பொருள் விளக்கத்தினை ஆராய்வதே இவ்வாய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்**

பற்றுமின்கள் - துரியம் -அண்டவாசலாயிரம் - சண்டவாசலாயிரம் - போக மானவாசல் - சங்கிரண்டு – தாரை - சன்னபின்னல் - தாரையூதல் - வல்லிரேல் - மூலநாடி - சங்கினோசை

**முன்னுரை**

சித்தர்கள் சாகாநிலையையம் அழியாத உடம்பையும் பெற்றவர்கள் சித்தர்கள். தவவலிமையின் காரணத்தினால் அஷ்டமாசித்திகளைக் கைவரப்பெற்றவர்கள் சித்தர்கள். மனிதமனம் எண்ணற்ற எண்ணக்குவியல்களை கொண்டியங்குகின்றது. இவ்வெண்ணக் குவியல்களே உலகியல் இன்பங்களை நாடி மறு பிறவிகளை எடுக்கத்தூண்டுகின்றது. இத்தகைய எண்ணக்குவியல்களை ஒழுங்குபடுத்துவதன் வாயிலாக மனித மனத்தை செம்மையாக்கி சிவம் என்னும் பேரின்ப நிலையை அடைவிக்க முயல்வதே சித்தர் இலக்கியங்களாகும். இத்தகைய சித்தர் இலக்கியங்கள் யோகத்தின் வழியாக உடல் மனம் மற்றும் ஆன்மாவின் ஒற்றுமையை மேம்படுத்த முடியும் என்று வலியுத்துகின்றன. அத்தகைய சித்தர்களில் நோக்கத்தக்கவராகிய சிவவாக்கியச் சித்தர் மனிதவாழ்வினுக்கு அவசியமான ஆன்ம ஞானத்தை; எடுத்தியம்பியுள்ளார். மெய்ப் பொருளை உணர்வதன் வாயிலாக சிவம் என்னும் பரவெளியை அடையலாம் என்கின்ற

இன்றியமையாத தத்துவத்தை சிவவாக்கியரின் பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன.

**மெய்ப்பொருள்**

இறைவனை மனிதன் எங்கெங்கோ தேடிக்கொண்டிருக்கின்றான். மனிதனுக்குள்ளே இருக்கின்ற இறைவனைச் சார்ந்து அவனைப் போலவே ஒருதன்மைத்தாய் நிற்கும் உயிரானது அவ்விறைவனுடன் ஒன்றாகி நின்று அவனுடைய திருவடிகளை உணர்த்துகின்றான் அவ்வாறு மனிதன் உணரும் நிலையில் இறைவன் அவ்வுயிர்க்குப் பேரின்பமாய்த் தோன்றுவான். அப்பேரின்பம் எல்லையில்லாமல் புதிது புதிதாய் விளைந்து கொண்டேயிருக்கும். இவ்வாறு உணரும் தன்மையை தானே உணராமல் தனக்கு முன் உணர்ந்தவர்கள் குருவாக இருந்து வழி செய்வார்கள் என்பதனை,

" என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்தது இல்லையே
என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்துகொண்டபின்
என்னிலே இருந்த ஒன்றை யார் காண வல்லரோ
என்னிலே இருந்திருந்து யான் உணர்ந்து கொண்டேனே"

சிவவாக்கியர் பாடல்: 7

எனக்குள்ளே ஒன்றாகி மெய்ப்பொருளாக இறைவன் இருக்கின்றான் என்பதை நான் முன்பு அறிந்து கொள்ளவில்லை. அப்பரம்பொருளை பல இடங்களில் தேடியும், நல்ல நூல்களைப் படித்தும், நல்லோரிடம் பழகுவதன் வாயிலாகவும் நல்ல குருநாதர் மூலமும் இறைத்தன்மை என்னிடமே இருப்பதை யான் அறிந்து கொண்டேன். தனக்குள் இருந்த உயிரை அறிந்து அதனுள் இருக்கும் ஈசனை யார் காண வல்லவர்கள். தனித்தனியே மட்டுமே மனிதன் உணர்ந்து கொள்ள முடியும். என்னிலே இருந்த அந்த மெய்ப்பொருளை அறிந்து அதையே என் உள்ளத்தில் இருத்தி தியானத்தில் இருந்து, இருந்து அந்த உண்மையை யான் உணர்ந்து கொண்டேன் என்றுரைக்கின்றார் சிவவாக்கியர்.

மெய்ப் பொருள் என்று அறியப்படுவது விஷ்ணுவாகவும் இருக்க முடியாது. பிரம்மாவும் இருக்க முடியாது. விஷ்ணுவாலும், பிரம்மாவாலும் அடி முடி காண முடியாமல் அப்பாலுக்கப்பாலாய் பேருருவாய் சிவன். அத்தகைய அப்புறத்திற்கு அப்புறமாய் கருமை செம்மை வெண்மை நிறங்களைக் கடந்து நின்ற சோதியாகி காரணப் பொருளாய் விளங்குகின்ற மெய்ப்பொருள் நமக்குள்ளேயே இருக்கிறான். அச்சிவனே சீவனாக கருமையிலும் சிகப்பு வெள்ளை அணுக்களிலும் கலந்து நின்று உயிரும் உடலும் இயங்க காரண கர்த்தாவாக இருக்கின்றான். சீவனைப் பற்றி,

“அரியுமல்ல வயனுமல்ல வலப்புறத்தி லப்புறம்
கருமைசெம்மை வெண்மையைக் கடந்து நின்றகாரணம்
பெரியதல்ல சிறியதல்ல பற்றுமின்கள் பற்றுமின்கள்
துரியமுங் கடந்துநின்ற தூரதூர தூரமே”

சிவவாக்கியர் பாடல்: 10

சிவனின் திருவடி நமக்குள் இருப்பதை உணருங்கள். திருவடி பெரியதும் இல்லை, சிறியதும் இல்லை, யாவிலும் நடுவாய் இருப்பது. அப்பாதத்தையே பற்றி நின்று தியானியுங்கள். அது துரியமாகிய பிரபஞ்சத்தில் தத்துவத்தையும் கடந்து நிற்பதால் வெகு தூரமாய் தோன்றும் தனக்குள்ளேயே கடந்து நிற்கும் அறிவை அறிந்து உண்மையை என்று உணர்ந்து தியானியுங்கள் என்று உணர்த்துவது மனிதனுக்கு உகந்த தத்துவ நிலையாகும்.

**அண்டவாசல்**

மனித உடலானது பற்றுக்களின் உறைவிடமாகவும் மனிதன் அடைய வேண்டிய இலக்கை அடைவிக்கும் வெறும் கருவியாகவும் திகழ்கின்றது. சித்தர்கள் வினைக்கு ஈடாக எடுத்த உடலை மாயையின் கூறு என்கின்றனர். நிலையில்லாத உடம்பினைச்சுமந்து கொண்டிருக்கும் மனிதர்கள் வாழ்கின்ற இவ்வுலகத்திற்கும் பிற உலகங்களுக்கும் ஆயிரமாயிரம் வழிகள் வாசல்களாக அமைந்திருக்கின்றது.

எண் சாண் உடம்பு கொண்ட எண்ணாயிரம் கோடி உயிர்கள் கோடிக்கணக்கான வாசல்களைக் கொண்டு இப்பூமியில் இலங்கி வருகின்றது. இதிலே இறைவன் பத்தாவது வாசலிலிருந்து உலாவுகின்றான் என்று சித்தர் உரைப்பது நோக்கத்தக்கது. இத்தகைய வாசல் ஏழை வாசலாகவும், ஏகமாகி நின்றிருக்கும் இறை என்னும் பேரின்பம் கிட்டும் வாசலாகவும் எளிமையாக எல்லோரிடமும் மறைவாக இருக்கிறது என்றுணர்த்த

“அண்டவாச லாயிரம்ப்ர சண்டவா சலாயிரம்
ஆறிரண்டு நூறுகோடி யானவாச லாயிரம்
இந்தவாச லேழைவாச லேகபோக மானவாசல்
எம்பிரா னிருக்கும்வாச லியாவர்காண வல்லரே”

சிவவாக்கியர் பாடல்: 19

எடுத்தியம்பியுள்ள இப்பாடலில் பத்தாவது வாசலை அடைகின்ற முறை அறிந்து யோகஞானத்தை கைக்கொண்டு அவ்வாசலின் பூட்டைத் திறந்து எம்பிரானாகிய ஈசன் இருக்கும் வாசலை யாவர் காணவல்லவர்களோ அவர்களே அண்ட வாசலின் பெரு நிலையை உணர்ந்தவர்கள்.

**சுழுமுனை**

முதுகுத்தண்டின் அடிப்புறத்தில், ஆசனவாய்ப்புறத்தில் பாம்பின் வால்போல் சுழுமுனை சுருண்டுகிடக்கும். யோக மார்க்கத்தைத் துணையாகக் கொண்டு சுழுமுனையை மேலே

எழுப்புவதன் வாயிலாக உடலுக்குள் இருக்கும் ஒவ்வொரு சக்கரத்திலும் உந்தப்பட்டு, இறுதியில் தலையின் உச்சியில் பாம்பு படம் எடுப்பதுபோல் விரிந்து நிற்கும். இந்த சுழுமுனையின் சக்தியை உடலானது யோகத்தின் மூலம் உணரமுற்படவேண்டும்.

உடலில் மூக்கு ஒன்று, வாசல்கள் இரண்டு. அவைகளில் நம் சுவாசக்காற்றானது இடகலை, பிங்கலை, சுழுமுனை எனும் நாடிகளில் பின்னலாக ஓடிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு சுவாசத்திலும் உயிர்ப்பிராணனில் இருந்து நாலு அங்குலம் குறைகின்றது. ஆகையால் பிணி மூப்பு ஏற்பட்டு ஆயுளும் மங்கி, மாண்டு போகும் மனிதர்கள் கோடானு கோடிப்பேராகும். இப்படியாக ஓடிக் கொண்டிருக்கும் மூச்சை சந்திரகலை, சூரியக்கலை, வழியாக கட்டுப்படுத்தி பிரணாயாமத்தினால் பிராண வாயுவைப் பெருக்கி உடம்பையும், உயிரையும் வளர்க்கவேண்டும்.

"சங்கிரண்டு தாரையொன்று சன்னபின்ன லாகையால்
மங்கிமாளு தேயுலகில் மானிடங்க ளெத்தனை
சங்கிரண்டை யுந்தவிர்ந்து தாரையூத வல்லிரேல்
கொங்கைகொங்கை பங்கரோடு கூடிவாழ லாகுமே"

சிவவாக்கியர் பாடல்: 21

இடகலை பிங்கலைகளை ஒழுங்குபடுத்தி சுழுமுனை எனும் வாசலைத் திறந்தது வாசியினால் ஒரு தாரையை ஊதுவதைப் போல் ஊதி மூலாதாரத்தில் மூண்டெழுகின்றக் கனலை மேலேற்றி சோதியில் சேர்க்க வல்லவர்களாகத் திகழ முடியுமானால் அழகில் சிறந்த அம்மையை இடபாகமாக் கொண்ட ஈசருடன் இணையமுடியும். மேலும், மூலாதார சக்கரத்தின் உள்ளே பாம்பைப் போல் சுருண்டு மூன்று வளையமாக குண்டலினி சக்தி கனலாகியத் தீயினைப் போல் இருந்து தூங்கிக் கொண்டிருக்கும். அதனை வாசியோகத்தின் வழி விழிப்புறச் செய்தால் அச்சக்தியானது சங்கின் ஓசையுடன் மேல் எழும்பும். அவ்வாசியை சுழுமுனை எனும் மூலனாடியால் முதுகுத் தண்டின் வழியாக மேலேற்றி சகஸ்ரதளம் என்னும் நடுப்பகுதியில் கொண்டு சேர்த்தால்

"இரண்டுமொன்று மூலமா யியங்குசக் கரத்துளே
சுருண்டுமூன்று வளையமாய் சுணங்குபோற் கிடந்ததீ
முரண்டெழுந்த சங்கினோசை மூலநாடி யூடுபோய்
அரங்கன்பட் டணத்திலே யமர்ந்ததே சிவாயமே"

சிவவாக்கியர் பாடல்: 98

இவ்வாறு வெளிப்படும் என்றுரைக்கின்றார் சிவ வாக்கியர். சக்தியும் சிவனும் ஒன்றாகி இயங்கும் போது அரங்கன் பள்ளி கொண்ட இடமானது எத்தகைய அனுபவத்தினைத் தருமோ அதனை யோகஞானத்தின் வழி தியானம் செய்து உணர்ந்து கொள்ளுங்கள் என்றுரைப்பது சுழுமுனை சக்தி சிவனது பரவச நிலையை உணர்த்தும் என்று புலனாகின்றது.

**பிறவா நிலை**

உயிரின் விடுதலை என்பது மரணமாகும். இளைமைக் காலத்தில் வாழ்கின்ற காண்கின்ற

அனைத்துமே எல்லாமே இன்பமாகத் தெரிகிறது எதிர்பாராத போது மரணம் வாசல் கதவைத் தட்டாமல் எப்படியாவது வாழ வேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொரு மனதனுடைய வாழ்விலும் இயல்பானதாகும். மனிதனின் மறுபிறவி என்பது சாத்தியத்திற்கு உட்பட்டதா என்பதனை சித்தர்கள் எடுத்தியம்பத் தவறவில்லை.

“கறந்தபால் முலைப்புகா கடைந்தவெண்ணை மோர்புகா
உடைந்துபோன சங்கினோசை யுயிர்களு முடற்புகா
விரிந்தபூ வுதிர்ந்தகாயு மீண்டுபோய் மரம்புகா
இறந்தவர் பிறப்பதில்லை யில்லையில்லை யில்லையே”

சிவவாக்கியர் பாடல்: 48

பசுவின் மடியில் இருந்து கறந்த பால் மீண்டும் பசுவின்முலைக் காம்புகளைச் சென்றடையாது. மோரிலிருந்து கடைந்தெடுக்கப்பட்ட வெண்ணெய் மீண்டும் மோராக மாற்றம் பெறாது. உடைந்து போன சங்கிலிருந்து ஓசை வராது,சங்கிலிருந்து வெளிவரும் மூச்சு மீண்டும் அவ்வுடலாகிய சங்கில் புகாது. விரிந்த பூ மொட்டாகாது. மரத்திலிருந்து உதிர்ந்த காய் மீண்டும் மரத்தில் ஒட்ட முடியாது. அது போல்தான் நம் உடம்பை விட்டு உயிர்போய் விட்டால் மீண்டும் அவ்வுடம்பில் சேர்த்து வைக்க முடியவே முடியாது. ஆகவே உடம்பில் உயிர் உலாவிக் கொண்டிருக்கும்போதே யோக நெறியினை சரிவரக் கற்று இறைவனை அடைந்து பிறவா நிலை என்னும் மேன்மையை அடையுங்கள் என்று சித்தர் குறிப்பிடுவது நிலைத்த சத்தியம் ஆகும்.

**தொகுப்புரை**

சித்தர் தமது சித்தம் என்னும் ஆன்ம ஞானத்தை இறைவன்பால் செலுத்தி சித்தி பெற்றவர்கள். சிவவாக்கியர் தமது புரட்சிகரமான தத்துவங்கள் வாயிலாக மனிதனை அறிவொளியில் கொண்டு சென்று மன ஆரோக்கியத்தை நிலைநிறுத்துகின்றார். உண்மை அறிவுக்கான தன்மையாகிய மெய்ப்பொருளை சிவ வாக்கியரின் பல்வேறு பாடல்கள் விளக்குகின்றன. இத்தகையப் பாடல்கள் மனதின் ஆழ்ந்த நிலையை அடைவதற்கான வழிகாட்டியாகத் திகழ்கின்றது. ஆன்மத்தின் ஒருநிலைப்பாடு உணரும் போது மனிதன் உயர்ந்த நிலையை அடைவான் என்னும் தத்துவ உடபொருளை சிவ வாக்கியர் உணர்த்துவது நோக்கத்தக்கது. மனிதனி;ன் வாழ்வில் உண்மையான நோக்கம் என்பது மெய்ப்பொருளை அறிந்து கொள்வதாகும் இத்தகைய அறிவின் தேடலை ஆழ்ந்த தத்துவத்துடனும் இயல்பான வாழ்வியல் கற்பித்தலுடனும் பரம்பொருளின் உண்மைத் தன்மையை ஆன்ம முன்னேற்றத்தை உடல் மற்றும் மனதின் ஒற்றுமையை குறித்தும் விரிவாக தெளிவுபடுத்துகின்றன.

**துணைநின்றவை**

1.பெரிய சிவவாக்கியர் பாடல்கள் - மா. வடிவேலு முதலியார், சென்னை , திருமகள் விலாச அச்சகம் , 1933

2.சித்தர் இலக்கியம், ஆய்வு நூல் - மீ.ப. சோமு , அண்ணாமலைப்பல்கலைக் கழகம்,அண்ணாமலை நகர். 2009

3. சித்தர்களின் பூசா விதிகள் - த. கோவேந்தன், சங்கர் பதிப்பகம் , வில்லிவாக்கம், சென்னை, 2000

4. பதினெண் சித்தர்கள் வரலாறு – எஸ் கோபால கிருஷ்ணன், பிருந்தாவனம், சென்னை.2007

5. சித்தர்கள் காட்டிய யோக நெறி - ஸ்ரீ வித்யாஞான பாஸ்கரா டாக்டர் நஜன், பிரதிபா பிரசுரம், சென்னை, 1994

6.https://shaivam.org/scripture/Tamil/1184/civavakkiyam-of-civavakkiyar/#gsc.tab=0